**Starting time 11.22 A.M.**

# <u>IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.</u>

## <u>O.S. No. 54 /2019</u>

Deposition of **D.W.3** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Vennila, Sheristadar of this court, on 27.07.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ராமன்** Father's Name : **திருநாவுக்கரசு**

Address : **எண்.2/23, பெரியதெரு, ரெட்டிவளம் கிராமம், நெமிலி வட்டம்.**

Age : 60

**<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

13. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அதிலுள்ள விவரங்களை நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேனா என்றால், ஆமாம். என்னை இன்று நீதிமன்றத்திற்கு யார் அழைத்து வந்தது என்றால், நானாக தான் வந்தேன்.

14. எனது முதல் விசாரணையில் ஆ அட்டவணையில் உள்ள சொத்துக்கள் என சொல்லியுள்ளது எந்த கிராமத்தில் உள்ளது என்றால், ரெட்டிவளம் கிராமத்தில் உள்ளது. அந்த சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியாது.

15. ஆ அட்டவணையில் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால், நிலம், கிணறு, பம்பு ஷெட், தென்னை மரங்கள் உள்ளது. அந்த ரெட்டிவளம் கிராமத்தில் உள்ள ஆ அட்டவணை சொத்துக்கள் சம்மந்தமாக எழுதிய ஆவணத்தில் தான்

நான் சாட்சி கையெழுத்து செய்தேனா என்றால், ஆமாம்.

16. 3–ம் பிரதிவாதி தான் என்னை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு என்னை கையெழுத்து செய்ய அழைத்து சென்றாரா என்றால், இல்லை, அந்த சமயத்தில் அவர் ஊரிலேயே இல்லை, 3–வது நாள் தான் ஆவணம் எழுதிய விவரத்தை நான் அவருக்கு சொன்னேன், அவரது அம்மா தான் என்னை அழைத்து சென்றார்.

17. 3–ம் பிரதிவாதியின் மனைவி எனக்கு உறவினாரா என்றால், எனது மனைவி வழியில் உறவினர் ஆகும். அந்த வகையில் நான் சாட்சி கையெழுத்து செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல, நான் சாட்சி கையெழுத்து செய்தது 2011–ம் ஆண்டு, ஆனால் 3–ம் பிரதிவாதிக்கு திருமணமானது 2019–ம் வருடம் ஆகும். செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றும், 3–ம் பிரதிவாதி கேட்டுக் கொண்டதன்பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 3–ம் பிரதிவாதி எனது மனைவி வழி உறவினர் என்பதால், அவருக்கு ஆதரவாக அவர் சொல்லியதன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

4–ம் பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜராகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**Ending time : 11.33 A..M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.07.27 15:31:53 +0530